**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 32** **நாள்: 07.04.2024**

**சென்னை மாவட்டத்தில் 3 நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் செலவின நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநில அளவிலான தேர்தல் செலவின சிறப்புப் பார்வையாளர் திரு. பி.ஆர்.பாலகிருஷ்ணன், இ.வ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகைக் கூட்டரங்கில் நடைபெற்றது.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் 3 நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் செலவின நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநில அளவிலான தேர்தல் செலவின சிறப்புப் பார்வையாளர் திரு. பி.ஆர்.பாலகிருஷ்ணன், இ.வ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (07.04.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகைக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் , சென்னையில் உள்ள மூன்று பாராளுமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் செலவினங்கள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள், பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு, ஊடகச் சான்று கண்காணிப்புக் குழு, காவல்துறையின் கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து சிறப்பு தேர்தல் செலவினப் பார்வையாளர் ஆய்வு மேற்கொண்டு, ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, ரிப்பன் மாளிகை கட்டடத்தில் அமைந்துள்ள ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு, தேர்தல் நடத்தை விதிகள் கண்காணிப்புக் குழு, கட்டுப்பாட்டு அறை, சி விஜில் செயலியில் பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றினை சிறப்பு தேர்தல் செலவினப் பார்வையாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் திரு. அபிஜித் அதிகாரி, இ.வ.ப., திரு. ஜி. ஏ. ஹரஹானந்த், இ.வ.ப., திரு.சுபோத் சிங், இ.வ.ப., திரு. மதுகர் குமார், இ.வ.ப., திருமதி முகேஷ் குமாரி, இ.வ.ப., திருமதி மானசி திரிவேதி, இ.வ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர்கள் (வருவாய் (ம) நிதி), டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (சுகாதாரம்), டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (பணிகள்), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (சென்னை தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (சென்னை மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (சென்னை வடக்கு) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**